# <u>அவசரக் கூட்டம்</u>

**அன்புடையீர்**

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் வருகிற 16.07.2025 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணிராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>பொருள் : 01</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகள் (Pot holes) மற்றும் சாலை துண்டிப்பு செய்யப்பட்டதால் ஏற்பட்ட குழிகள் ஆகியவற்றில் உடனடியாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தெரிவித்தார். அதனடிப்படையில் பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகள் மற்றும் சாலை துண்டிப்பு செய்யப்பட்டதால் ஏற்பட்ட குழிகள் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.14.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் : 02</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகள் (Pot holes) மற்றும் சாலை துண்டிப்பு செய்யப்பட்டதால் ஏற்பட்ட குழிகள் ஆகியவற்றில் உடனடியாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தெரிவித்தார். அதனடிப்படையில் பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகள் மற்றும் சாலை துண்டிப்பு செய்யப்பட்டதால் ஏற்பட்ட குழிகள் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.14.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் : 03</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட கான்கிரீட் மற்றும் தார் சாலைகளில் குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்படும் சமயங்களில் நகராட்சி குடிநீர் பணியாளர்கள் மூலம் குடிநீர் கசிவு சரிசெய்யப்பட்டு வருகிறது. இதில் கான்கிரீட் சாலைகளில் குடிநீர் குழாய் பழுது ஏற்படும்பொழுது, சாலையை துண்டித்து பணிகள் மேற்கொள்ள கடினமாக உள்ளதால் வாடகை அடிப்படையில் மினி பிரேக்கர் இயந்திரம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் குடிநீர் உடைப்பை சரி செய்ய தாமதம் ஏற்படுகிறது. எனவே, பல்லடம் நகராட்சிக்கு சொந்தமாக மினி பிரேக்கர் இயந்திரம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் : 04</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 01 கல்லம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மேற்கு பார்த்த கட்டிடத்திற்கு மின்வசதி மற்றும் வர்ணம் பூச வேண்டியுள்ளது. பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளி கழிப்பிடம் திறந்தவெளியில் உள்ளதால் சமூக விரோதிகளால் இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதுடன், பள்ளி வகுப்பறையில் உள்ள பொருட்களையும், கழிப்பறையும் சேதப்படுத்தி வருகின்றனர். எனவே, கல்லம்பாளையம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மேற்கு பார்த்த கட்டிடத்தில் மின்வசதி ஏற்படுத்தவும், வர்ணம் பூசவும் மற்றும் கழிப்பிடத்தை சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியை மேற்கொள்ள

ரூ.5.00 இலட்சம் செலவில் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் : 05**</u>

அரசாணை (நிலை) எண்:390, பொது (முதல்வரின் முகவரி) நிர்வாகம், நாள்:19.06.2025ன் படியும், மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படியும், பல்லடம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம்" செயல்படுத்த அனைத்து வார்டுகளையும் உள்ளடக்கிய 6 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் துண்டு பிரசுரங்கள் அச்சடித்தல், விளம்பர பிளக்ஸ் பேனர்கள், துறைவாரியான 13 ஸ்டால்கள் அமைத்திடும் வகையில் பெயர் பேனர்கள் அச்சடித்தல், ஆட்டோ மூலம் மைக் விளம்பரம் செய்தல், முகாம் நடைபெறும் இடங்களில் கணினிகள், பிரிண்டர்கள் வைக்க தேவையான Flug point, switch பொருத்துதல், இணையதள வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் சாமியானா நிழல் பந்தல், டேபிள் கிளாத், சேர் கிளாத், தரை மேட் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1767/2025/அ2)

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் : 06**</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 10 பாரதிபுரம் பகுதியில் புதியதாக அமையும் சாலையில் புதியதாக எட்டு சோலார் மின்விளக்குகள் பொருத்தும் பணியை ரூ.3.36 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**நகர்மன்ற தலைவர்**
**பல்லடம் நகராட்சி**